**செ. கு. எண்**: 44 **நாள்**:13,02,2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 13.2.2013

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பொழிக்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. நெப்போலியன் என்பவரின் மகன் ஜேம்ஸ் 30.1.2013 அன்று விளவங்கோடு வட்டம், தேங்காய்பட்டினம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது, கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மீனவர் ஜேம்ஸ் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான ஜேம்ஸ் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**